## புதிய மின் இணைப்புப் பெறுவது தொடர்பான விண்ணப்பப் படிவம் நிரப்புதல் தொடர்பான அறிவுரைகள்

**விண்ணப்பப் படிவத்தின் தொடர் இலக்க முறைமையின் படி, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு ஏற்ப விண்ணப்பப் படிவம் நிரப்பப்படல் வேண்டும்.**

1. வணக்கத்திற்குரிய / திரு / செல்வி / திருமதி என்பனவற்றுள் தேவையற்ற சொல்லினை கீறிடுங்கள். தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று முழுப் பெயர் எழுதப்படல் வேண்டும்.

   உதாரணம் - திஸாநாயக்க முதியன்சேலாகே நாமல் திஸாநாயக்க

2. விண்ணப்பதாரரின் பெயர் முதல் எழுத்துக்களுடன் ஆங்கில பெரிய எழுத்துக்களில் எழுதப்படல் வேண்டும் என்பதுடன், ஒரு எழுத்திற்கு ஒரு கூடு என்ற விதமாகப் பாவிக்கப் படல் வேண்டும்.

   உ+ம்

| D | . | M | . | N | . | D | I | S | S | A | N | A | Y | A | K | A |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

3. புதிதாக மின் சேவையினை பெறுவதற்கு உத்தேசிக்கும் இடத்தின் விலாசம் ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன் ஒரு எழுத்திற்கு ஒரு கூடு என்ற விதமாகப் பாவிக்கப்படல் வேண்டும்..

4. புதிய மின் கணக்கு ஆரம்பிக்கப்படும் வரைக்கும் பிறிதொரு இடத்திற்கு கடிதம் கிடைக்கப் பெறல் வேண்டும் எனின் மாத்திரம் அங்கு விலாசம் குறிப்பிடப்படல் வேண்டும்.

   4.1. கடிதங்களுக்கு நிரந்தரமாக அதே முகவரி பயன்படுத்தப்பட வேண்டுமானால், தயவுசெய்து கூட்டினுள் ஒரு (✓) உடன் குறிக்கவும்.

5. விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஒவ்வொரு எண்ணிற்கும் ஒரு பெட்டியைப் பயன்படுத்தி எழுதப்பட வேண்டும்.

   செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை (என்.ஐ.சி) இல்லை எனின், தயவுசெய்து கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) இலக்கம் / ஓட்டுநர் உரிமத்தின் இலக்கத்தை குறிப்பிட்டு வகையையும் குறிப்பிடவும்.

6. விண்ணப்பதாரரின் நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசி எண்கள் குறிப்பிடப்படல் வேண்டும். உங்கள் சேவை இணைப்பு விண்ணப்ப செயல்முறையின் நிலை திட்டமிடப்பட்ட மின் தடைகள் , நீண்ட கால மின் தடைகள் , உங்கள் மின் பட்டியல்(பில்) மற்றும் கொடுப்பனவுகளின் விவரங்கள் குறித்து குறுந்தகவல் (எஸ்எம்எஸ்) மூலம் உங்களுக்கு தெரிவிக்க இந்த கையடக்கத் தொலைபேசி எண் பயன்படுதப்படும். எனவே அந்த சேவைகளைப் பெறவதற்கு, உங்கள் சரியான கையடக்கத் தொலைபேசி எண்ணை இங்கே எழுதுங்கள்

7. முன்பு இந்த இடத்திற்கு மின் இணைப்பு பெறப்பட்டிருப்பின், தயவுசெய்து அந்த மின்சார கணக்கு இலக்கத்தை குறிப்பிடவும் .

8. உங்கள் மின் இணைப்பு தேவையின் வகைக்கேற்ப சரியான கூட்டினுள் (✓) குறிக்கவும். மேலும் தகவலுக்கு அருகிலுள்ள CEB வாடிக்கையாளர் சேவை மையத்தைத் தொடர்பு கெள்ளவும்.

8.1. நிரந்தரமான ஒரு இணைப்புக்கு.

8.2. மின் தேவையின் அளவில் மாற்றம் செய்ய, ஏற்கனவே உள்ள இணைப்பின் விபரங்களை வழங்கவும்.
உ+ம்: தற்போதுள்ள வழங்கல் ஒரு படி நிறுவுகை 30A இணைப்பு என்றால், தயவுசெய்து 1P 30A என வழங்கப்பட்ட இடத்தில் எழுதுங்கள்.

தற்போதுள்ள வழங்கல் மூன்று படி நிறுவுகை 30A இணைப்பு என்றால், தயவுசெய்து 3P 30A என வழங்கப்பட்ட இடத்தில் எழுதுங்கள்.

8.3. தற்காலிக சேவை இணைப்பிற்கு
இந்த இணைப்புகள் தேவையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிகமாக வழங்கப்படுகின்றன.
உ+ம்: திருவிழாக்கள்,குறுகிய கால நிகழ்வுகள்

8.4. நிரந்தர சேவையாக மாற்றக்கூடிய தற்காலிக சேவை இணைப்பிற்கு
உ+ம்: வீடு அல்லது கட்டிடம் கட்டுமானத்தில் உள்ளது, சாலை மேம்பாட்டு திட்டங்கள்.

8.5. 8.3 அல்லது 8.4 இன் கீழ் தற்காலிக இணைப்பு தேவைப்படும் நாட்களை அண்ணளவாக குறிப்பிடவும்.

9. புதிய மின் சேவை வழங்கல் விண்ணப்பிக்கப்படுகின்ற தேவைக்கு ஏற்ப கீழ் காட்டப்பட்டுள்ள விதமாக ஆங்கில எழுத்தினைக் குறிப்பிடல் வேண்டும். உங்கள் தேவைப்பாடு கீழ் காண்பிக்கப்பட்டுள்ள அட்டவணையில் இல்லை எனின் <u>விண்ணப்பப் படிவத்தின் உரித்தான வெற்றிடத்தில்</u> உங்கள் மின்சாரத் தேவையினைக் குறிப்பிடுங்கள்.

| | |
|---|---|
| A | வீடு |
| B | நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டடம் |
| C | ஹோட்டல் |
| D | வணிக கட்டடத் தொகுதி |
| E | மத வழிபாட்டுத் தலம் |
| F | அலுவலகம் |

| | |
|---|---|
| G | வெல்டிங் வேலைத்தளம் / மர அரிவு ஆலை / கல் உடைப்பு ஆலை |
| H | அரச வைத்தியசாலை / அரச பாடசாலை |
| I | அரச பல்கலைக்கழகம் / தொழில் பயிற்சி நிறுவனம் |
| J | தொழிற்சாலை |
| K | பொதுநோக்க நீர் இயந்திரம் |
| L | விவசாய நடவடிக்கைகளுக்கான நீர் இயந்திரம் |

10. விண்ணப்பிக்கும் மின் சேவை வழங்கல் வகைக்கு எதிரே (✓) அடையாளம் இடப்படல் வேண்டும். (கொழும்பு மற்றும் கண்டி நகரங்களில் மாத்திரமே 15A மின் வழங்கல் சேவை உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும்)

11. நாளொன்றின் பயன்பாட்டு நேரத்திற்குரிய கட்டண அறவீட்டு முறையை (Time of use Tariff ) நீங்கள் கோர விரும்பினால், தயவுசெய்து கூட்டினுள் (√) குறிக்கவும். இவ் அறவீட்டு முறையில் மின்பாவனை, மூன்று நேர இடைவெளிகளில் (நாள்,உச்சம் மற்றும் உச்சமற்ற) அளவீடு செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்படும். .

12. சேவை தேவைப்படும் வளாகத்தின் ஜி.பி.எஸ் இலக்கம் விண்ணப்பதாரிற்கு தெரியும் எனின், அகலாங்கு மற்றும் நெட்டாங்குகளை தசம வடிவத்தில் நிரப்பவும்.

உதாரணம்: கொழும்பு 02 இல் உள்ள CEB தலைமை அலுலகத்தின் ஜி.பி.எஸ் ஆள்கூறுகள்கள்

| 6 | . | 9 | 3 | 0 | 3 | 2 | 3 | | 7 | 9 | . | 8 | 4 | 4 | 8 | 9 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

13. ஜி.பி.எஸ் இலக்கம் தெரியாவிடின் மின்சாரம் பெறப்படும் இடத்திற்கான பாதையை தெளிவாகத் தரவும்.

14. விண்ணப்பதாரின் பெயரில் எந்தவொரு வளாகத்திற்கும் முன்னர மின்சார இணைப்புகள் பெறப்பட்டிருந்தால், தயவுசெய்து அவ்வறான மின் கணக்கு இலக்கங்களைக் குறிப்பிடவும்.

15. விண்ணப்பதாரர் திகதியை எழுதி, கொடுக்கப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மை மற்றும் சரியானவை என்று கூறி கையொப்பத்தை வைக்க வேண்டும். வேறொருவரின் நிலம்/வீடு/சொத்துகளுக்கூடாக மின்சாரக் கம்பி செல்லும் போது ஏதேனும் ஆட்சேபனை ஏற்பட்டால் அதன் பாதையை மாற்றுவதற்கான முழு செலவையும் செலுத்த ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் ஒப்பந்த தேவையை மீறாமல் மின்சாரத்தை பயன்படுத்த வேண்டும்.